Registered as a NewsPaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-IV

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஐப்பசி-25 | 11-11-2005 | வெள்ளிக்கிழமை | ஓசை-267



உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்

R.V.பந்தல் சேவை

T.P:0712-610008

(சி-13213)

# சனாதிபதித்தேர்தலால் தமிழ் மக்களுக்கு எந்தப் பயனுமில்லை என்பதே அனைவரதும் முடிவு

## தமிழரின் அரசியல் அனுபவ வெளிப்பாடு இதுவேயென சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

[கிளிநொச்சி]

**நடைபெறவுள்ள சனாதிபதித்தேர்தலால் தமிழ் மக்களுக்கு எந்தப் பயனுமில்லை என்பதே தமிழ் மக்கள் அனைவரினதும் கருத்தாக இருக்கின்றது. இது எங்கள் மக்களின் அரசியல் அனுபவம், அரசியல் தெளிவின் வெளிப்பாடாக உள்ளது என அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன் அவர்கள் தமிழீழ தேசியத் தொலைக்காட்சிக்கு நேற்று வழங்கிய நேர்காணலில் தெரிவித்தார்.**

நேற்று தமிழ் தேசியக் கூட்டமைப்பினரைச் சந்தித்தபின் அச்சந்திப்புத் தொடர்பாக அவர் தமிழீழ தேசியத் தொலைக் காட்சிக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்தாவது;

எமது அவதானிப்பின்படி ஒட்டு மொத்தமாக தமிழ்மக்கள் அனைவரும் சனாதிபதித்தேர்தல் மீது அக்கறையின்றியுள்ளனர். தாங்கள் இந்தத்தேர்தலை நிராகரிப்பதாகவும், இந்தத்தேர்தலால் தமக்கு எந்தப் பயனும் இல்லை என்பதன் வெளிப்பாடுதான் பரவலாக ஏற்பட்டு இருக்கிறது.

சாதாரண மக்களிலிருந்து புத்திஜீவிகள் வரை அனைத்துத் தரப்பிலுமே இப்படியான கருத்துக்கள்

(IIIஆம் பக்கம் பார்க்க)

## தேசியத்தலைவரின் பிறந்தநாளன்று பிறக்கும் குழந்தைகளுக்கு அன்பளிப்பு

தமிழீழ தேசியத்தலைவரின் பிறந்தநாளை முன்னிட்டு மாணவருக்கும் பிறக்கும் குழந்தைகளுக்கும் உதவுதொகை வழங்க மன்னார் மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் முடிவு செய்துள்ளது.

மன்னார் மாவட்ட மாணவர்அமைப்பினரின் ஒழுங்கமைப்பில் மன்னார் மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கக் கூட்டம் கடந்த ஒன்பதாம் திகதி மன்னார் நகர அரசியல்துறைப்பொறுப்பாளர் முடியரசன் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. தேசியத்தலைவர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மன்னார் மாவட்டத்தைச்சேர்ந்த ஐந்து வறிய மாணவர்களுக்கு க.பொ.த உயர்தரம் வரை கல்வி கற்பதற்கு உதவு தொகையாக தலா ஆயிரம் ரூபா வழங்குதல் தேசியத்தலைவர் அவர்களின் பிறந்தநாளன்று மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் பிறக்கும் குழந்தைகளுக்கு தலா ஆயிரம் ரூபா அன்பளிப்பாக வழங்குதல் போன்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. (தீ.லோ)

## சனாதிபதித்தேர்தலில் போட்டியிடும் இரு பிரதான வேட்பாளர்கள் மீதும் நம்பிக்கை வைக்கமுடியாது

### தமிழ்தேசியக்கூட்டமைப்பு பா.உ.இரா.சம்பந்தன்

(அலுவலக செய்தியாளர்)

தென்னிலங்கையில் சனாதிபதித் தேர்தலில் குதித்திருக்கும் இரு பிரதான கட்சிகள் மீதும் அதன் வேட்பாளர்கள் மீதும் நம்பிக்கை வைக்க முடியாது. கடந்த காலங்களில் அவர்கள் தமிழ் மக்களின் பிரச்சினையைக் கையாண்ட முறையை ஆராய்ந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு இந்த முடிவை எடுத்துள்ளது. இதுவே தமிழ்மக்களது முடிவாகவும் இருக்கும் இவ்வாறு தெரிவித்தார் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்றக் குழுத்தலைவர் இரா.சம்மந்தன்.

தமிழ் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினரைச்

(IVஆம் பக்கம் பார்க்க)



## பா.உறுப்பினர் சுரேஸ்பிரேமச்சந்திரனின் வீட்டின்மீது கைக்குண்டுவீச்சு

(யாழ்ப்பாணம்)

தமிழ் தேசியக்கூட்டமைப்பின் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரனின் வீட்டின் மீது இனம்தெரியாத நபர்களினால் கைக்குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் கட்டப்பிராய் வீதி, கட்டப்பிராயில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் வீட்டின் மீதே இவ்வாறு கைக்குண்டு வீச்சுத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை 4.30 மணியளவிலேயே இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.இதன்போது சுரேஸ்பிரேமச்சந் திரனது வீட்டை இலக்குவைத்து இரு கைக்குண்டுகள் வீசப்பட்டுள்ளன.இவை வீட்டுக்கு சமீபமாக வீழ்ந்து வெடித்தன. எனினும் அவ்வீட்டில் இருந்தவர்களுக்கோ அப்பகுதியில் இருக்கும் அயல் வீட்டாருக்கோ எதுவித பாதிப்புகளும் ஏற்படவில்லை.

இக்குண்டுத்தாக்குதல் குறித்து பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவிக்கையில் நேற்றுக் காலை எனது வீட்டுக்கு இரண்டு கைக்குண்டுகளும் வீசப்பட்

(IVஆம் பக்கம் பார்க்க)

## சம்பூரில் அரச திணைக்கள தலைவர்களை கேணல் சொர்ணம் சந்தித்துப் பேச்சு

திருகோணமலை சம்பூரில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பணிமனையில் நேற்றுக் காலை வடக்குக் கிழக்கு அரச திணைக்களங்களின் பணிப்பாளர்களையும், தலைவர்களையும், திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பில் திருகோணமலை நகரின் தற்போதைய அபிவிருத்திப் பணிகள் பற்றியும், இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களில் திருமலை மாவட்டம் புறக்கணிக்கப்படுவது தொடர்பாகவும், உத்தேசித்துள்ள அபிவிருத்தித் திட்டங்கள் பற்றியும் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளன.

காலை 10.30மணி தொடக்கம் 12.30மணி வரையிலான இரண்டு மணித்தியாலங்கள் நீடித்த இச் சந்திப்பில் 45இற்கும் மேற்பட்ட பல்வேறுபட்ட திணைக்களங்களின் தலைவர்களும்,பணிப்பாளர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

இதேவேளை எதிர்வரும் சனிக்கிழமை திருகோணமலையில் இயங்கும் கணினி நிலையங்களின் உரிமையாளர்கள், மற்றும் தனியார் கல்வி நிலையங்களின் உரிமையாளர்களையும் திருகோணமலை மாணவர் அமைப்பின் பிரதிநிதிகளையும் தமிழீழ விடுதலைப் புலிகள் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

## ரணில்-மகிந்த விவாதத்திற்கு நடுநிலையாளராக சட்ட உதவி ஆணைக்குழு விருப்பம் தெரிவிப்பு

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கும் எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்குமிடையில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் பகிரங்க விவாதம் தொடர்பில் நடுநிலையாளராக செயற்பட சட்ட உதவி ஆணைக்குழு விருப்பம் தெரிவித்துள்ளது.

இது குறித்து ஆணைக்குழு இரண்டு வேட்பாளர்களுக்கும் தெளிவுபடுத்தியுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் எஸ்.எஸ். வீரரத்ன தெரிவித்தார்.

சனாதிபதித்தேர்தலில் போட்டியிடும் இரண்டு வேட்பாளர்களினதும் விஞ்ஞாபனங்கள் தொடர்பாக விவாதிப்பதற்காக நடைபெறும் இந்த விவாதம் பக்கச் சார்பற்ற விதத்தில் நியாயமாக நடத்தப்படவேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

## போர்நிறுத்த உடன்படிக்கையின்மூலம் சமாதானத்தை ஏற்படுத்த முடியாது

### - பிரதமர் மகிந்த ராஜபக்ஷ

போர்நிறுத்த உடன்படிக்கையின் மூலம் சமாதானத்தை ஏற்படுத்த முடியாது என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். புத்தளத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

போர் நிறுத்த உடன்பாட்டில் வடக்கு முஸ்லிம்களுக்கு அதிக பாதகம் ஏற்பட்டுள்ளது.

முஸ்லிம் மக்களைத் தொடர்ந்தும் பாதிப்புக்கு உள்ளாக்கக்கூடாது.

இந்த நிலையில் போர்நிறுத்த உடன்படிக்கையை மீளமைக்க வேண்டியது அவசியம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மீடின் கொலைக்கான துப்பாக்கி சம்லி வீட்டில் இருந்ததாம்

### - பதுக்கப்பட்டிருந்ததை கண்டுபிடிப்பு

சிறிலங்கா இராணுவப்புலனாய்வுப் பிரிவு அதிகாரி ரிஎஸ்வி மீடினை சுடுவதற்காக ஐஸ் மஞ்சு என்பவர் கொண்டுவந்த 7.62 மி.மீ.பிஸ்டல் சம்லியின் வீட்டிலுள்ள மின்விசிறியில் மறைந்து வைக்கப்பட்டிருந்ததாக விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

ரிஎஸ்வி மீடினைக் கொலை செய்வதற்கு ஏற்கனவே திட்டம் தீட்டப்பட்டிருந்தது. 1996 ஆம் ஆண்டுமுதல் ஜஸ் மஞ்சுவிற்கும் கேணல் மீடினுக்கும் இடையில் தொடர்புகள் இருந்துள்ளதாக படை அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.இராணுவ உளவுப் பிரிவினால் மீடினிற்கு அச்சுறுத்தல் இருப்பதாக கடந்த ஒக்ரோபர் மாதம் 15-23இற்கு உட்பட்ட காலப்பகுதியில் அவருக்கு எச்சரிக்கப்பட்டிருந்ததாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# வரிவிளம்பரம்


**Wep Site Designing**

உங்களது வியாபார நிறுவனங்களை சர்வதேச ரீதியில் குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்திடவும்,வியாபார நிறுவனத்தின் பெயரில் **இணையத்தளங்களை பதிவு செய்து உருவாக்கிடவும்**

**தொடர்புகட்கு:**

வின்நெற் கணனி பயிற்சி நிலையம், டிப்போ வீதி,கிளிநொச்சி (சி.13074)

**வியாழ மாற்றம் உங்களுக்கு எப்படி?**

எங்கும் விற்பனையாகின்றது ரூ15/= கணிப்பாசிரியர்-சத்யா, ஆனைக்கோட்டை (077/ 6547175) 31.01.2006 வரை வக்கிர யுத்தச்செவ்வாய், சனிராகு கேதுக்கள் ஒன்றுக் கொன்று தியபார்வைகளால் தேர்தல் வன்முறைகளையும் அரசு மாற்றங்களால் பாரிய திருப்பங்களையும், அரசியல் நெருக்கடிகளையும் நாட்டில் உண்டாக்கும். (5400)

**விற்பனைக்கு**

நல்லநிலையிலுள்ள பென்ரியம் IV கணினி டொட்மற்றிக்பிறின்டர் (Epson 1120-A4) மொனிரேற்றிங் மிசின் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு ICS கணினி பயிற்சி நிலையம், இலங்கை வங்கி அருகாமை, யாழ்சாலை, கிளிநொச்சி. பார்வையிடும் நேரம் மாலை 5.00 - 8.00மணிவரை. (6917)


# வவுனியாவில் குற்றச்செயல்கள் அதிகரிப்பை கட்டுப்படுத்த மாவட்ட நீதிபதி அறிவுறுத்து

வவுனியாவில் குற்றச்செயல்கள் அதிகரித்துச் செல்வதாகவும் இதனை கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் வவுனியா மாவட்ட நீதிபதி அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

வவுனியாப் பகுதிகளில் கடந்த ஒரு மாத காலமாக அதிகரித்துள்ள குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக வவுனியா பிரதேச குற்றத் தடுப்புப் பிரிவுக்குப் பொறுப்பான உதவிப் பொறுப்பதிகாரி தர்மசிறி, வவுனியா தலைமையக இன்ஸ்பெக்டர் அபேசிங்க பண்டார, குற்றத்தடுப்புப் பிரிவுக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரி ஜெயசிங்க ஆகியோரை தனித்தனியே அழைத்துப் பேசிய வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் குற்றச் செயல்களைக் குறிப்பாக ஊர்தி கடத்தல்களைத் தடுத்து நிறுத்துவதற்கு உறுதியான நடவடிக்கைகளை எடுக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஒருமாத காலத்தில் மாத்திரம் 11 உந்துருளிகள், இரண்டு ஊர்திகள், இரண்டு முச்சக்கர வண்டிகள் என்பன கடத்தப்பட்டுள்ளன. வவுனியா நகரத்தின் மையப்பகுதியில் இருந்து இரு உந்துருளிகள், இரண்டு ஊர்திகள் துணிகரமாகக் கடத்திச் செல்லப்பட்டுள்ளன.

இது தொடர்பான முறைப்பாடுகளையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர். ஏற்கனவே கடத்தப்பட்ட ஏழு உந்துருளிகளும், ஒரு முச்சக்கர வண்டியும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளுக்குள் கொண்டு செல்லப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக இந்த விசாரணைகளின் மூலம் தெரியவந்திருப்பதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

இராணுவத்தின் கட்டுப்பாடற்ற பகுதிக்குள் கடத்தப்படுகின்ற ஊர்திகள் கொண்டு செல்லப்படுவதைத் தடுப்பதற்காக ஓமந்தை, உயிலங்குளம் பகுதிகளில் கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதை அடுத்து முருங்கன் அரிப்பு பிரதேசத்தின் ஊடான கடத்தல் நடவடிக்கைகள் அதிகரித்திருப்பதாக பொலிசார் நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளதையடுத்து, பொலிஸ் உயரதிகாரிகளுக்கு இதுபற்றித் தெரிவித்துள்ள வவுனியா மாவட்ட நீதிபதி இவற்றைத் தடுப்பதற்கு உரிய அதிகாரிகளின் மூலம் நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

# உலருணவு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு யூலை, ஒகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களுக்கான இலவச உலருணவுவிநியோகம் எதிர்வரும் 14ஆம் திகதி முதல் யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து ப.நோ.கூ.சங்கங்கள் மூலமும் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கேற்ற வகையில் யாழ். மாவட்ட ப.நோ. கூ. சங்கங்கள் மேற்படி மாதங்களுக்குரிய வழங்கற் கட்டளைகளை யாழ்.மாவட்டச் செயலக புனர் வாழ்வு புனரமைப்பு நல்லினக்கச் செயலகத்தில் பெற்று விநியோக நடவடிக்கைகளை குறிப்பிட்ட திகதியில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு யாழ். உதவித் [illegible] திட்டப் பணிப்பாளர் கூறியுள்ளார். (28)

# திட்டமிடல் மேம்பாட்டுச் செயலகம் மன்னாரில் திறந்து வைப்பு

தமிழீழ விடுதலைப்புலிகளின் திட்டமிடலுக்கும் மேம்பாட்டுக்குமான மாவட்டச் செயலகம் மன்னாரில் கடந்த செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் ஆண்டாங்குளம் பகுதியில் முற்பகல் 10 மணிக்கு இம் மாவட்டச் செயலகம் திறந்துவைக்கப்பட்டது.

இந் நிகழ்வின் முதன்மைச் சுடரினை தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே. பாலகுமாரன் ஏற்றிவைத்தார்.

தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் ஏற்றிவைத்தார். திட்டமிடலுக்கும் மேம்பாட்டுக்குமான செயலகத்தின் பெயர்ப் பலகையினை மன்னார் அரச அதிபர் விஸ்வலிங்கம் திறைக்கம் செய்துவைத்தார். திட்டமிடல் செயலகத்தைச் சேர்ந்த மா. செல்வின் செயலகத்தின் நாடாவைவெட்டித் திறந்துவைத்தார்.

# ஒரு வாரம் விடுமுறை

சனாதிபதித் தேர்தலை முன்னிட்டு அரசாங்கப் பாடசாலைகளுக்கு ஒருவாரகால விடுமுறை வழங்கப்படவுள்ளது. இதன் அடிப்படையில் எதிர்வரும் 14 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரையில் பாடசாலைகள் மூடப்படவுள்ளன.


தேர்தல் ஏற்பாடுகள் மற்றும் ஒழுங்குகளை கருத்திற் கொண்டே இந்த விடுமுறை வழங்கப்படுகிறது.

எனினும் இந்த விடுமுறை நாட்களுக்காக வேறுவார இறுதி நாட்களில் பாடசாலைகள் திறக்கப்படுமா என்ற தகவல் எதுவும் கல்வி அமைச்சால் வெளியிடப்படவில்லை. (32)

# ஆறு கோடி ரூபா செலவில் அமைக்கப்படும் பால் உற்பத்திப் பொருட்கள் பதனிடும் தொழிற்சாலை

(விசுவமடு)

கிளிநொச்சி மாவட்டம் விசுவமடுவில் ஆறு கோடி ரூபா செலவில் யாழ்.மாவட்டத்தில் இருந்து புலம் பெயர்ந்து வாழும் அன்பர் ஒருவரின் நிதியுதவியுடன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நிறுவிவரும், பால் உற்பத்திப்பொருட்கள் பதனிடும் தொழிற்சாலை வேலைகள் முடிவுறும் தருவாயில் உள்ளது.



(படம்-வதனன்)

# துப்பாக்கிச் சூடு இருவர் காயம்

மட்டக்களப்பு வந்தாறுமூலையில் நேற்றிரவு 9.30மணிக்கு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இருவர் காயமடைந்தனர்.நவரட்ணம் மற்றும் சந்திரசேகர் ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

இவர்கள் தற்சமயம் மட்டக்களப்பு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (32)

# 22 சீனர்கள் திருமலையில் கைது!

(கொழும்பு)

திருகோணமலைத் துறைமுகத்தின் அதியுச்ச பாதுகாப்பு வலயத்திற்குள் அனுமதியின்றி நுழைந்த ரோலர் படகு ஒன்று சிறிலங்கா கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் அதிலிருந்த 22 சீனர்கள் உட்பட 27பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் ஐந்து பேர் இலங்கையர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மீன்பிடிப்பதற்கான சட்டரீதியான அனுமதியைப் பெற்றுள்ள இந்தச் சீனர்கள் இலங்கையில் நிறுவனம் ஒன்றில் தம்மைப் பதிவு செய்து கொண்டவர்கள் எனத் தெரியவருகின்றது.


# கண்ணீர் அஞ்சலி



கார்த்திகைத் திங்கள் 10 ஆம் நாள் வியாழக்கிழமை நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனப் பணியாளர் திரு.ந.க.இரட்ணம் அவர்களின் தந்தையார் இயற்கை எய்திவிட்டார். அன்னாரின் மறைவில் துயருறும் அவருடைய குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

திலீபன் மருத்துவ சேவை,
பணியாளர்கள்,போராளிகள்.

(சி.13328)

# கண்ணீர் அஞ்சலி



எமது நலவாழ்வு அபிவிருத்தி நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் திரு. நல்லதம்பி இரட்ணம் அவர்களின் தந்தையார் 10.11.2005 வியாழக்கிழமை காலை திருகோணமலையில் இயற்கை எய்திவிட்டார். அன்னாரின் மறைவினால் துயருறும் எமது பணிப்பாளர் குடும்பத்தின் துயரில் நாமும் இணைந்து கொண்டு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

பணிப்பாளர்,
நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனம்.

(சி.13327)


# -தமிழீழ வனவளப்பாதுகாப்புப் பிரிவின்- ஒரு இலட்சம் மரங்கள் நடுகை திட்டம் அங்குரார்ப்பணம்

(அனுவலக செய்தியாளர்)

தமிழீழ வனவளப் பாதுகாப்புப் பிரிவின் மீள்வனமாக்கல் பகுதியினர் நடப்பு நிதியாண்டின் மரநடுகைத்திட்டங்களை பருவகால மழையினைத் தொடர்ந்து ஆரம்பித்துள்ளனர். இந்தவகையில் நேற்று ஏ-9 நெடுஞ்சாலையில் அமைந்துள்ள 18ஆம் போர் கொக்காவில் பகுதியில் மரக்கன்றுகள் நடுகையினை ஆரம்பித்துள்ளனர்.

இம்மர நடுகையானது 2005 வனவிழிப்புணர்வு பிரச்சாரத்திட்டத்தின் கீழ் அந் நிறுவனப் பொறுப்பாளர்கள்,பணியாளர்களினால் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது. குறித்த அமைவிடத்தில் மலைவேம்பு, வேம்பு,முதிரை, சமண்டலை, பாலை,வாகை,சவுக்கு, மருமுந்திரிகை ஆகியன சூழலுக்கு மிகவும் பொருத்தமுடைய எண்ணாயிரம் மரக்கன்றுகள் நடுகை செய்யப்படவுள்ளன. மேலும் இவ்வாண்டில் ஒரு இலட்சம் மரக்கன்றுகளை நடுகை செய்வதற்கு தமிழீழ வனவள பாதுகாப்புப் பிரிவு ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.

இந்தச் செயற்றிட்டத்தின் தொடராக எதிர்வரும் வாரத்தில் முள்ளியவளைப் பகுதியிலும் 35 ஆயிரம் தேக்கு, மருமுந்திரிகை என்பனவற்றையும் நடுகை செய்ய சகல ஏற்பாடுகளையும் இப்பிரிவு மேற்கொண்டுள்ளது.

இந்த வகையில் கடந்த 11 ஆண்டுகாலப்பகுதியில் 11 இலட்சம் மரக்கன்றுகளை இப்பிரிவு தாயக பூமியில் நடுகை செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். தமிழீழ தேசிய வனவளக் கொள்கைப் பிரகடனத்திற்கமைய ஆண்டுதோறும் ஒரு இலட்சம் மரக்கன்றுகள் நடுகை செய்து பராமரிக்கும் பணியை மேற்கொள்ளும் சமகாலத்தில் இழந்த வனங்களைப் ஈடுசெய்தலும் எஞ்சியவனங்களை பாதுகாத்தலும் என்ற நிறுவனத்தின் நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டு தமிழீழ தேசிய மாவீரர் தினத்தையொட்டி பள்ளி மாணவர்களுடனான மர நடுகைத்திட்டத்தையும் முன்னெடுக்கவுள்ளது. (தீ)

# இனப்பிரச்சினைத்தீர்வில் காலதாமதமே பொருளாதாரத்தை பாரியளவில் பாதித்துள்ளது

## - நியூஸ்வீக் சஞ்சிகை கருத்து

இலங்கையில் அரசியல் நகர்வில் தோல்வியும் இனப்பிரச்சினைக்கான தீர்வில் காலதாமதமும் பொருளாதாரத்தை பாரிய அளவில் பாதித்துள்ளதாக நியூஸ்வீக் சஞ்சிகை தமது பிந்திய பதிப்பில் தெரிவித்துள்ளது.

அண்மிக்கும் சனாதிபதித் தேர்தலை முன்னிட்டு இந்த சஞ்சிகையில் வரையப்பட்டுள்ள கட்டுரையில் இலங்கையின் வரவு- செலவுத்திட்டத்தின் துண்டு விழும் தொகையானது நிகரதேசிய உற்பத்தியின் 108 வீதத்தை மக்கள் மீதான படுகடனாக சுமத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

1960 ஆம் ஆண்டு சிங்கபூரின் பிரதமரான லீ குவான் யூ தமது நாடு இலங்கையை பின்பற்றி வளர்ச்சியடைய முயற்சிப்பதாக தெரிவித்திருந்தார்.

ஆனால் இன்று சிங்கபூரின் மூலதன வருமானமானது 28 ஆயிரம் டொலர்களாக இருக்க இலங்கையின் மூலதன வருமானம் 1000 டொலர்களாகும் என நியூஸ்வீக் சஞ்சிகை குறிப்பிட்டுள்ளது.

இனப்பிரச்சினையை மையமாக கொண்ட 20 வருட கால யுத்தம் நாட்டின் பொருளாதாரத்தை சீர்கெடச் செய்துள்ளது. எனினும் இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்னெடுப்பதில் இலங்கையின் அரசியல் தலைமைகள் தோல்வியடைந்துள்ளன.

இந்த நிலையில் சமாதானப் பேச்சுவார்த்தையை நடத்திய அனுபவம் கொண்ட ரணில் விக்கிரமசிங்கவும் கடும்போக்குடையவர்களின் ஆதரவை கொண்ட மகிந்த ராஜபக்ஷவும் சனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகிறார்கள்.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட கருத்துக்கணிப்புகளின்படி தேர்தல் வெற்றிவாய்ப்புகளில் ரணில் விக்கிரமசிங்க முன்னிலை வகிப்பதாக குறித்த சஞ்சிகை தெரிவித்துள்ளது.

நாட்டின் அரசியல் தலைமைகள் பிரச்சினைகளை உரியவிதத்தில் அணுகி தீர்வுகளை முன்வைப்பதன் மூலமே பொருளாதார வளர்ச்சியை காணமுடியும் என சஞ்சிகை ஆலோசனை தெரிவித்துள்ளது.

# குற்றச் செயல்கள் குறித்த தகவல்களில் இருபது வீதமானது போலியானவை!

## - சிறிலங்கா பொலிஸ்மா அதிபர் தகவல்

(கொழும்பு)

சிறிலங்காவில் பொலிசாருக்குக் கிடைக்கப்பெறும் குற்றச் செயல்கள் தொடர்பான தகவல்களில் 20 வீதமானவை போலியானவையென பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார். கொழும்பிலுள்ள பொலிஸ் தலைமையத்தில் திங்கட்கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார். சிலர் வழங்கும் இவ்வாறான போலியான தகவல்கள் காரணமாக பொலிசார் தமது விசாரணைகளை மேற்கொள்வதில் பாரிய சவால்களை எதிர்நோக்குவதாகவும் இவ்வாறான போலியான தகவல்களை வழங்குவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுப்பதாவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் திணைக்களத்தால் 119 என்ற அவசர சேவை இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்னர், குற்றவாளிகளைக் கண்டு பிடித்தல் மேலும் இலகுவாகியுள்ளதாகவும் 119 என்ற இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தினால், தற்போதைய நிலையில் 15 தொடக்கம் 20 நிமிடங்களில் பொலிசார் முறைப்பாட்டைச் செய்தவரை அணுகும் நிலை காணப்படுவதாகவும், எதிர்காலத்தில் இந்த நேரத்தை மேலும் குறைப்பதற்கு பொலிஸ் திணைக்களம் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ செய்தியாளர் மாநாட்டில் மேலும் தெரிவித்துள்ளார்.

# விமல் வீரவன்சவுக்கெதிரான வழக்கு விசாரணை இன்று

ஜே.வி.பியின் பரப்புரைச் செயலாளரும், அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்சவுக்கு எதிராக குமார் ரூபசிங்க தாக்கல் செய்த வழக்கு மீதான விசாரணைகள் இன்று நடைபெறவுள்ளன.

விமல் வீரவன்சவைக் கைது செய்து நீதி மன்றத்தில் முன்னிலைப் படுத்துமாறு பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவு பிறப்பிக்கக் கோரி இந்த வழக்கை அவர் மேன் முறையீட்டு நீதி மன்றத்தில் தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு மீதான விசாரணை முன்னர் மேல் முறையீட்டு நீதிமன்ற நீதியாளர்களான கே.சிறிபவன், சிசிர அப்ரூ ஆகியோர் முன்னிலையில் இடம் பெற்றது. விமல்வீரவன்சவுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு அவருக்கு எதிராக நீதி மன்றம் ஒன்றில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படவேண்டும் என்றும் குமார்ரூபசிங்க தெரிவித்துள்ளார்.

# படையினரிடம் உதவி கோரல்

(கொழும்பு)

சனாதிபதித் தேர்தல் வாக்களிப்புகளின் பின்னர் வாக்குப்பெட்டிகளைக் கணக்கிடும் மத்திய நிலையங்களுக்கு சிறிலங்கா வான்படை மற்றும் கடற்படையின் உதவியைத் தேர்தல் ஆணையாளர் கோரியுள்ளார்.

இது தொடர்பில் அவர், பாதுகாப்பு அமைச்சின் செயலருக்குக் கடிதம் எழுதியுள்ளார். பாதுகாப்பு அமைச்சின் செயலர் இதற்கு உடன்பாடு தெரிவித்துள்ளார்.

# வரவு-செலவுத்திட்டத்தில் மகிந்தவின் சிந்தனைகள் புறக்கணிப்பு

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியால் நேற்று முன்தினம் பாராளுமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வரவு செலவுத் திட்டத்தில் மகிந்தவின் சிந்தனைகள் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இவ்வாறு ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மகிந்தவின் சிந்தனைகள் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளமையின் மூலம் அவரின் தேர்தல் கொள்கைப் பிரகடனம் ஒரு பொய்யான பிரகடனம் எனவும் அதில் நிறைவேற்ற முடியாத யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## சனாதிபதித்.

தான் வெளிப்பட்டுக்கொண்டிருக்கிறது. இது எங்கள் மக்களுடைய பூரணமான அரசியல் அனுபவம். அவர்களுடைய அரசியல் நெறிவின் வெளிப்பாடுதான் இந்த நிலைமை.

எங்களுடைய மக்களைப் பொறுத்தவரையில்- எங்கள் எல்லோரையும் பொறுத்தவரையில் இரண்டு ஆட்சிக்காலத்திலுமே எங்களுடைய மக்கள் மிகப்பெரிய அச்சுறுத்தலுக்கும், துயரங்களுக்கும், அழிவுகளுக்கும் உள்ளாக்கப்பட்டவர்கள் என்ற வகையில் இரண்டு ஆட்சித்தலைமைகள் மீதுமே நம்பிக்கை அற்றுள்ளனர். குறிப்பாக சிறிலங்காவினுடைய இறைமைக்காக-சிங்களப் பேரினவாதிகளுக்கு தலைமை தாங்குவதற்கான ஒரு தேர்தலாகத்தான் இதனை எங்களுடைய மக்கள் பார்க்கும் நிலைமைக்கு உள்ளாகியுள்ளனர். அந்த வகையில் எங்களுடைய மக்களுடைய உணர்வுகள்-அவர்களுடைய நிலைப்பாடுகளின் அடிப்படையில் நாங்கள் இன்று நீண்ட நேரமாக விவாதித்து ஒரு தீர்க்கமான முடிவிற்கு வந்திருக்கின்றோம்.

அதாவது இந்தத் தேர்தலில் எங்களுடைய மக்களுடைய தீர்மானங்கள்- எங்களுடைய மக்கள் எந்த நிலைப்பாட்டை எடுக்கிறார்களோ- அந்தத்தீர்மானங்களுக்கும், அந்த உணர்வுகளுக்கும் மதிப்பளிக்கும் வகையில் அதற்குப் பலம் சேர்க்கும் வகையில்- எங்களுடைய செயற்பாடுகள் அமையவேண்டும் என்பதற்காகத்தான் நாங்கள் இன்று தீர்மானம் எடுத்திருக்கின்றோம்.

யாழ்.மாவட்டத்திற்குபலாலிக்கு வந்த இரண்டு வேட்பாளர்களும் இராணுவத்தினரைச்சந்தித்து அவர்களுடைய நலன்களை விசாரித்து இராணுவப் பலத்தை வளர்ப்பது தொடர்பாகவே பேசியிருக்கிறார்கள். இராணுவ ரீதியாக மேலாதிக்கத்தைச் செலுத்துகின்ற போக்கின் வெளிப்பாடு களைத்தான் தேர்தல் நடவடிக்கைகளூடாக-பிரச்சாரங்களுக்கூடாக வெளிப்படுத்தியுள்ளார்களே ஒழிய எங்களுடைய மக்களுக்கு ஒரு நிம்மதியான வாழ்க்கையை நிறைவான சூழலை உருவாக்குவது தொடர்பாக அவர்கள் எந்தவித உத்தரவாதத்தையும் காட்டவில்லை. அதேவேளை இரண்டு பேரினவாதத் தலைமைகளும் போட்டி போட்டுக் கொண்டு தமிழ் மக்களுக்கு எப்படி அநீதிகளை-நெருக்கு வாரங்களை ஏற்படுத்துவதில் தாங்கள் முனைந்திருக்கின்றார்கள்-செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை வெளிப்படுத்துகின்ற நிலைமை உருவாகி இருக்கின்றது. இது தமிழ் மக்களுடைய வெறுப்பின் உச்சத்திற்கு அவர்களை கொண்டு வந்திருக்கிறது. எனவே இதுதொடர்பான தீர்மானம் எடுக்கின்ற பொறுப்பை மக்களிடமே விட்டிருக்கின்றோம். அந்த நிலைப்பாட்டினையே நாங்களும் முழுஅளவிலேயே ஏற்றுக்கொண்டிருக்கின்றோம்.

எங்களைப் பொறுத்தவரையில் மக்கள் தீர்மானங்களை எடுக்கக் கூடிய சக்தியாக மாறியிருக்கின்றார்கள். அந்த வகையில் நாங்கள் எந்தவித தீர்மானத்திற்கும் போக வேண்டிய தேவையில்லை. தேர்தல் நடைமுறைகளை கவனிக்க சர்வதேச கண்காணிப்பாளர்கள் வந்திருக்கின்றார்கள். அவர்கள் தமிழர் தாயகப்பகுதிகளுக்குள் வந்து செயற்படுகின்ற பொழுது தமிழ் மக்களுடைய உணர்வுகளையும் அவர்களுடைய செயற்பாடுகளையும் நேரடியாகப்பார்க்கின்ற பொழுது அவர்கள் எங்களுடைய மக்களின் உணர்வுகளை நேரடியாக உணர்கின்ற ஒரு சூழல் உருவாகும். அந்த வகையில் அவர்களுக்கு எங்களுடைய பூரண ஒத்துழைப்பைக்கொடுக்க நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

போர்நிறுத்தக்கண் காணிப்புக்குழுவின் தலைமைப் பதவியிலிருந்து நோர்வே விலக யோசித் திருப்பதாகக் கூறியுள்ளது?

இது ஊடகங்களில் வந்த செய்தியாகத்தான் இருக்கின்றது. அதிகார பூர்வமாக ஒரு தரப்பென்ற வகையில் நோர்வேத்தரப்பில் இருந்து எங்களுக்கு உத்தியோக பூர்வமான நிலைப்பாடு அறிவிக்கப்படவில்லை. எனவே அதுபற்றி எந்தவிதமான கருத்துக்களும் சொல்ல முடியாதநிலையில் இருக்கின்றோம்.

ஐக்கியதேசியக்கட்சியைச் சார்ந்த நவீன் திசாநாயக்க, மிலிந்தமொறகொட ஆகியோர் தென்னிலங்கை தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கருணாவினுடைய பிளவை தாங்கள் தான் உருவாக்கியதாக உரிமைகோரியிருக்கின்றார்களே?

கருணா குழுவினுடைய பிளவு என்பதை நாங்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. கருணாவையும் அவருடன் சேர்ந்த உறுப்பினர்களையும் நாங்கள் விசாரணைக்கு உட்படுத்தவேண்டிய நிலைக்குத்தள்ளப்பட்டோம். அவருடைய செயற்பாடுகள்- அவர்களுடைய குற்றங்கள், அவருடைய மக்கள் விரோத நடவடிக்கைகள்- குற்றச்சாட்டுக்கள் காரணமாக அவருக்கு நாங்கள் சில ஒழுங்கு நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய நிலைக்கு எங்களுடைய தலைமைப் பீடம் தள்ளப்பட்டது. அந்த ஒழுங்கு நடவடிக்கையை எடுக்கின்ற தீர்மானத்தை எடுத்தபோதுதான் கருணா அதற்குக் கட்டுப்பட மறுத்து எங்களுடைய தலைமைமீதும், போராட்டதின் மீதும் முறையற்ற வகையில் சில குற்றச்சாட்டுக்களைக் கூறிக்கொண்டு விடுதலை அமைப்பைத் தான் பிளவுபடுத்தி தாங்கள் பிரிந்து சென்று தனி இயக்கமாகக் கருதுகின்ற ஒரு தோற்றப்பாட்டை உருவாக்க முனைந்தார். ஆனால் எங்களுடைய மக்களையும், போராளிகளையும் பொறுத்தவரையில் அவருடைய இந்தச்செயற்பாடுகளுக்கு முற்றுப் புள்ளி வைத்து ஒரு தீர்க்கமான பதிலைக் கொடுத்தார்கள். அந்த வகையில் கருணா ஒடித்தப்பினார் என்று தான் சொல்லவேண்டும்.

அப்படி ஓடிச்சென்றபோது அதற்குத் துணைபோனவர்கள் தான் அந்தக் காலகட்டத்தில் ஆட்சிபீடத்தில் இருந்தவர்கள். அவர்கள் அதனை இன்று பகிரங்கமாக ஏற்றுக்கொள்கின்ற நிலைப்பாடு வந்திருக்கிறது.

சனாதிபதி சந்திரிகாவின் ஆட்சிக்காலம் பற்றி?

காலத்திற்குக்காலம் வருகின்ற சிங்கள இனவாதத்தலைவர்கள் போட்டிபோட்டுக்கொண்டு ஒருவரை ஒருவர் விஞ்சும் முகமாகவே தங்களுடைய அழிப்பு நடவடிக்கையைச் செய்தார்கள். இதிலே சந்திரிகா கொஞ்சம் கூடுதலான புள்ளிகளை எடுத்திருக்கிறார். அதாவது தமிழ் மக்களுக்குத் தீவிரமான சேதத்தை பாரிய அழிவுகளை ஏற்படுத்தினார். அந்த வகையில் ஒப்பீட்டளவில் முதலாவது இடத்தில் சந்திரிகா இருக்கின்றார் அவருடைய ஆட்சிக்காலம் தமிழ் மக்களைப் பொறுத்தவரை மறக்கமுடியாத இருண்ட கொடூரமான காலமாகவே நாங்கள் பார்க்கின்றோம்.

இன்று உலகமே எதிர்பார்த்திருக்கின்ற மிக முக்கியமான விடயம் தமிழீழ தேசியத்தலைவரினுடைய மாவீரர் நாள் செய்தி. எதைப் பெரும்பாலும் உள்ளடக்கியதாக அந்தச் செய்தி இருக்குமென நீங்கள் நினைக்கின்றீர்கள்.

இதை இப்போது என்னால் கூற முடியாது விட்டாலும் உண்மையிலேயே வருடாந்தம் எங்களினுடைய தேசத்தினதும், தேசியத்தினதும், எங்களுடைய மக்கள் சார்பாக எங்களுடைய தேசியத்தலைவரால் விடுக்கப்படுகின்ற கொள்கைப் பிரகடன உரையாகத்தான் அந்த உரை இருக்கும். நான் நினைக்கின்றேன் உலகில் பெரும் எதிர்பார்ப்போடு எதிர்பார்க்கின்ற விடயமாகத்தான் எங்களுடைய தேசியத்தலைவரது கொள்கைப் பிரகடன உரை அமைந்திருக்கலாம். அதேபோன்று நிச்சயமாக இந்த மூன்றரை வருடங்கள் ஆகப் போகின்ற இந்த யுத்தநிறுத்த சமாதானச் சூழலில் நடைபெற்ற விடயங்களை ஒரு பட்டறிவாகக் கொண்டதாகத்தான் நிச்சயமாக எங்களுடைய தேசியத்தலைவரினுடைய நிலைப்பாடும், எங்களுடை கொள்கைப்பிரகடனமும் இருக்கும்.

அந்தவகையில் எங்களுடைய தேசியத்தலைவர் மாவீரர் தின உரையில் எங்களுடைய மக்களுக்கான தீர்க்கமான செய்திகளை வழங்குவார். வழமைபோன்று தீர்க்கமாக அவரது நிலைப்பாடுகள் இருக்கும். அந்த வகையில் எங்களுடைய மக்கள் ஆவலோடு இதனை எதிர்பார்த்துக்கொண்டு இருக்கின்றார்கள். முக்கியமாக எங்களுடைய தேசியத்தலைவரினுடைய கொள்கைப்பிரகடன உரை மிகவிரைவில் எங்களுடைய மக்களை வந்துசேரும். அது பற்றி-அந்த விடயங்கள் பற்றி நான் விரித்துக் கூறுவது பொருத்தமல்ல- அதுபற்றிக் கூறவும் முடியாது.

மாவீரர் நாள் நிகழ்வை மிகச்சிறப்பாக தமிழர்கள் வாழ்கின்ற அனைத்துப்பிரதேசங்களிலும் எழுச்சியாக நடத்துவதற்கு மிகத் தீவிரமாக உழைத்துக் கொண்டிருக்கின்றார்கள். அந்தவகையில் இந்த மாவீரர் நாள் உரையும் உலகெங்கிலும் வாழ்கின்ற தமிழர்களுடைய உணர்வின் வெளிப்பாடாக இந்த மாவீரர் நாள் நிகழ்வு இருக்கப் போகின்றது.

அதேபோல எமது தேசியத் தலைவரினுடைய கொள்கைப் பிரகடன உரை எங்களுடைய மக்களுக்கு மட்டுமல்ல உலகெங்கிலும் வாழ்கின்ற பல கோடி பேருடைய எதிர்ப்பார்ப்பாக இந்த உரை அமையப்போகின்றது. அந்த உரையை எதிர்பார்த்து உலகம் முழுவதிலுமுள்ள அரசியல் ஆய்வாளர்கள், அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள்பல்துறைசார்ந்தோரும், பலகோடி மக்களும் இன்று பெரிய எதிர்பார்ப்புடன் இருக்கின்ற ஒன்றாக எங்களுடைய தேசியத்தலைவரினுடைய கொள்கைப் பிரகடன உரை இருக்கின்றது.

இது எங்களுடைய தேசத்திற்கும், மக்களுக்கும் உலக அரங்கில் பெரும் எதிர்பார்ப்பையும், கௌரவத்தையும், உயர்மதிப்பையும் தருகின்ற விடயமாகத்தான் இருக்கும். எனவே எங்களுடைய தேசியத் தலைவரினுடைய உரையை நாங்கள் கூட ஆவலோடு எதிர்பார்த்திருக்கின்றோம் என்றார் அவர்.

# இராணுவக் காவலரண் இருந்த காணியில்

# இரு பெண்களின் எலும்புக்கூடுகள் கண்டுபிடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஏழாலை மத்திய மகாவித்தியாலயத்திற்கு அண்மை



யாகவுள்ள இராணுவ காவலரண் அமைந்திருந்த காணிக்குள் இருந்து இரண்டு எலும்புக்கூடுகள் காணி உரிமையாளரினால் கண்டுபிடிக் கப்பட்டுள்ளன. நீண்ட நாட்கள் படையினரின் ஆக்கிரமிப்பிலிருந்த காணியிலிருந்தே இந்த மனித எழுப்புக் கூடுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

குறித்த காணியிலிருந்து படையினர் அண்மையில் வெளியேறிய நிலையில் அதனைத் துப்பரவு செய்து கொண்டிருந்த அதன் உரிமையாளர் இந்த எழுப்புக் கூடுகளைக் கண்டு பிடித்துள்ளார்.

இவை இரண்டு பெண்களுடைய எழும்புக் கூடுகளாக இருக்கலாம் என அவற்றுடன் இருந்த உடுதுணிகள் மூலம் அறியக்கூடியதாக உள்ளது.

## மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் பலி

(வடமராட்சி)

சட்டவிரோதமான முறையில் வீட்டிற்கு மின் இணைப்பை ஏற்படுத்தியபோது மின்சாரம் தாக்கி பரிதாபகரமான முறையில் இளம் குடும்பஸ்தர் பலியானார்.

மேற்படி சம்பவம் நேற்று வியாழன் மாலை நான்கு மணியளவில் வாணர் குடியிருப்பு பருத்தித்துறையில் இடம்பெற்றுள்ளது. இதன் போது வாணர் குடியிருப்பு புலோலி மேற்கு பருத்தித்துறையைச் சேர்ந்த 40 வயதுடைய இளம் குடும்பஸ்தரான கந்தசாமி அமிர்தலிங்கம் என்பவரே பரிதாபகரமான முறையில் உயிரிழந்துள்ளார்.

மேற்படி நபர் தனது பிரதான குடியிருப்பு வீட்டிற்கு சட்டவிரோதமான முறையில் பிரதான மின் கம்பியில் மின் இணைப்பை ஏற்படுத்த முற்பட்டபோதே மின் தாக்கிப் பலியானார்.

பலியானவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப் பட்டுள்ளது. சடலம் பரிசோதனையின் பின்னரே உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என மாவட்ட வைத்திய அதிகாரி கதிரவேற்பிள்ளை தெரிவித்தார். (கா)

## வாக்குச்சாவடியில் வன்முறையிலீடுபடுவோரை சுடுமாறு பொலிசாருக்கு உத்தரவு

வாக்குச் சாவடிகளுக்கு அருகில் வன்முறைகளில் ஈடுபடுவோரை சுடுமாறு சகல பொலிஸ் உத்தியோகஸ்தர்களுக்கும் அநுராதபுரம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உத்தரவிட்டுள்ளார்.

தேர்தல் நடைபெறும் தினத்தன்று வன்முறைகளில் ஈடுபடும் நபர்களை தகுதி தராதரம் பாராது இந்த நடவடிக்கையை எடுக்குமாறு பிரதேசத்தின் பொலிஸ் அத்தியட்சகரான ஜயபுரீ உடவத்த ஆலோசனை வழங்கியுள்ளார்.

தேர்தல் தினத்தில் நடமாடும் பொலிஸ் சேவைகள் மற்றும் சோதனைச் சாவடிகளையும் அமைத்து பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

பொலிஸ் மட்டுமல்லாது இராணுவத்தினரும் பணியில் ஈடுப்படுத்தப்பட வுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

தேர்தல்கள் ஆணையாளரின் ஆலோசனைகளுக்கு அமைவாக இவ்வாறான கடும நடவடிக்கை எடுக்க நேர்ந்ததாகவும் ஜயபுரீ உடவத்த தெரிவித்தார்.

## சட்டவிரோதமாக வெளிநாடுசெல்லமுற்பட்ட 11பேர் கட்டுநாயக்கவில் கைது

சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முயற்சித்த 11 பேர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் கடவுச்சீட்டுகளோ, விமானப் பயணத்திற்கான பயணச் சீட்டுகளோ காணப்படவில்லை எனப் பொலிசார் தெரிவித்தனர்.

இவர்கள் சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல விமான நிலைய அதிகாரிகள் சிலர் உதவியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று அதிகாலையில் இரண்டு மணியளவில் மாலைதீவுக்குச் செல்லும் விமானத்தில் செல்லவிருந்த சந்தர்ப்பத்தில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

இவர்களில் ஐந்து பெண்களும் அடங்குவதாகப் பொலிசார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் வவுனியா, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், போன்ற பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனப் பொலிசார் தெரிவித்தனர்.

சிவில் விமான சேவை கட்டளைச் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்ட சந்தேக நபர்கள் எதிர்வரும் 16 திகதி வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## சிறி.மு. காங்கிரசின் விளம்பரத்தை ஒளிபரப்ப அரச ஊடகம் மறுப்பு

### -சட்ட நடவடிக்கை எடுக்க முடிவு

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சனாதிபதித் தேர்தல் தொடர்பாக அரசாங்க ஊடகம் ஒன்றில் ஒளிபரப்பு வழங்கிய விளம்பரத்தை ஏற்றுக் கொள்ள அந்த ஊடகத்தின் உயரதிகாரி மறுத்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இந்த நடவடிக்கையானது தேர்தல் சட்டங்களை மீறும் செயல் என அந்தக் கட்சி சுட்டிக்காட்டியதாகவும் தமது விளம்பரத்தை ஒளிபரப்புவதற்கு ஏற்றுக் கொள்ள மறுத்த அரச ஊடகத்தின் உயரதிகாரி மீது சட்டநடவடிக்கை எடுக்கவும் அந்தச் கட்சி தீர்மானித்துள்ளதாக அதன் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

## இம்மாத இறுதியில் எரிக் இலங்கைக்கு வருகிறார்

இலங்கையின் அமைதி முயற்சிகளிற்கான நோர்வேயின் சிறப்புத் தூது வரும், தற்போதைய நோர்வே அரசாங்கத்தின் அபிவிருத்தி அமைச்சருமான எரிக் சூல்ஹெய்ம், இம்மாத இறுதியில் இலங்கைக்கு சிறப்புப் பயணம் ஒன்றினை மேற்கொள்ளவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையின் சனாதிபதித் தேர்தல் முடிவுற்றதும் இலங்கைக்கு வர முடிவு செய்துள்ள அவர், இலங்கையில் சமாதான முயற்சிகளுக்கான ஏற்பாட்டுப் பணிகளைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்காகவும், போர் நிறுத்த ஒப்பந்தத்தினை தொடர்ந்தும் முன்னெடுப்பது தொடர்பாகவும், சம்பந்தப்பட்ட இரு தரப்பினருடன் கலந்துரையாடல்களையும் மேற்கொள்ளவுள்ளார்.

இம்மாத இறுதியில் வருகை தரும் இவர் வன்னிக்கும் வந்து தமிழீழ வடுதலைப் புலிக்களைச் சந்தித்து கலந்துரையாடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கைப் பயணத்தை முடித்த பின்னர் எரிக் சூல்ஹெய்ம் இந்தியாவிற்கும் செல்லக் கூடும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## நிறுத்தலளவைக்கருவிகள் முத்திரையிடல்

புதுக்குடியிருப்புப்பகுதியில் பயன்பாட்டிலுள்ள அனைத்து நிறுத்தலளவைக்கருவிகளையும் சரிபார்த்து முத்திரையிடுஞ் செயற்பாடு 2005.11.03 ஆம் திகதியிலிருந்து ஒட்டுசுட்டான் சாலை புதுக்குடியிருப்பிலமைந்துள்ள நிறுத்தலளவைப்பிரிவுச் செயலகத்தில் நடைபெற்று வருகின்றது. எனவே பயன்பாட்டிலுள்ள அனைத்து நிறுத்தலளவைக் கருவிகளையும் 2005. 11.25ஆம் திகதிக்குள் முத்திரையிட்டுக்கொள்ளுமாறு வருவாய்ப்பகுதியின் நிறுத்தலளவைப்பிரிவு கேட்டுள்ளது.

## பா.உறுப்பினர்..

டுள்ளது.

இது திட்டமிட்டு செயற்படுத் தப்படுகின்ற விடங்களாகவுள்ளன. இச்சம்பவங்களானது, சுரேஸ் பிரேமச்சந்திரன் என்ற தனிமனி தனுக்கு அப்பால் அவர் செல்கின்ற பாதை, கருத்துக்களுக்கு எதிராக இவற்றில் இருந்து திசை திருப்ப வேண்டும். என்பதற்காக ஒரு மிரட்டல் முறையில் விடயங்கள் இடம்பெறுவதாகக் கருதுகிறேன். (33,37)

## வடக்கு கிழக்கில் இருந்து கொழும்பு சென்ற தொடருந்து படையினரால் சோதனை

வடக்குகிழக்கில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற தொடருந்துகள் நேற்று முற்பகல் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டன.

ராகமையில் வைத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

பாதுகாப்புக் கருதிப் பொலிசாரும், படையினரும் மற்றும் தொடருந்து பாதுகாவலர்களும் இதில் பங்கேற்றனர்.

கொழும்பு நகரின் பாதுகாப்பு தொடர்பிலேயே இந்தச் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சனாதிபதித்தேர்தலில்....

சந்தித்துப் பேச்சு நடத்திய பின் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.அவர் மேலும் கூறுகையில்; எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் வடக்குக் கிழக்கில் வாழும் தமிழ் பேசும் மக்கள் எவ்விதமாக நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றிப் பேசினோம் இதுபற்றி மிகவும் ஆழமாகவும், தெளிவாகவும் பேசினோம்.

இலங்கை சுதந்திரமடைந்த காலந்தொட்டு மாறி மாறி ஆட்சிப்பீடமேறிய சிங்கள அரசுகள் தமிழ்மக்களை எவ்விதமாக நடத்தினார்கள் என்பது பற்றியும்.தமிழ்மக்களது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு, எவ்விதமாகச் செயற்பட்டார்கள் என்பது பற்றியும், இராணுவ ரீதியாக தமிழ்மக்கள் எப்படி அடக்கப்பட்டார்கள் என்பது பற்றியும் கதைத்தோம் அத்துடன் தமிழ்மக்கள் மீதான இனப்படு கொலையை ஏற்படுத்துவதற்கு இந்த அரசுகள் எவ்விதம் நடந்து கொண்டார்கள் என்பது பற்றிய பல்வேறு விடயங்கள் பற்றி நீண்ட நேரமாகப் பேசினோம்.

இந்த நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு சிங்கள அரசுகள் எவ்விதம் செயற்பட்டார்கள் விசேடமாக கடந்த மூன்றரை வருடகாலமாக தமிழீழ விடுதலைப்புலிகளுடன் யுத்த நிறுத்தம் ஏற்பட்டிருந்தது. அதன் பிறகு சமாதானப் பேச்சு விடயத்தில் ஆரம்பத்தில் இருந்த ஐக்கிய தேசியக்கட்சி அரசும் அதன்பின்னர் அரசுப் பொறுப்பேற்ற பொதுக் கூட்டமைப்பு அரசும் எவ்விதம் செயற்பட்டன என்பது அனைவருக்கும் தெரியும் இவை பற்றியும் ஆராய்ந்தோம்.

இந்தச்சந்திப்பில் கலந்து கொண்ட கூட்டமைபின் பாராளுமன்ற உறுப்பினர்களும் தமது கருத்துக்களைத் தெரிவித்தனர். தமிழீழ விடுதலைப் புலிகள் சார்பில் அரசியல்துறைப் பொறுப்பாளர் தங்களது கருத்தைத் தெரிவித்தார்.

இவற்றின்படி இறுதியில் ஒரு முடிவை எடுத்தோம். அதாவது சனாதிபதித் தேர்தல் மூலமாக தமிழ் தேசியப் பிரச்சினைக்கு தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வை இந்த அரசுகளால் ஏற்படுத்த முடியாது என்பது எமது கருத்து. இதில் எமது கடந்த கால அனுபவங்கள் முக்கியமானது.

அவற்றை நாம் ஒரு போதும் மறந்து விடமுடியாது.

இராணுவ ரீதியாக எங்கள் மக்களுக்கு ஏற்பட்ட அனுபவங்கள் மறக்க முடியாதவை. அதுபோல அரசியல் ரீதியாக நீண்ட காலங்களாக அதாவது ஆயுதப் போராட்டத்தின் முன்னும் பின்னுமான அனுபவங்கள் கொடுமையானது. அதிலும் குறிப்பாக கடந்த மூன்றரை வருடமாக நடைபெற்ற நிகழ்வுகள் மறந்து விடமுடியாது. இவற்றை எல்லாம் மனதில் வைத்து தேர்தலைப்பற்றிச் சிந்திக்கின்ற பொழுது தமிழ்மக்கள் இதில் அக்கறை காட்ட வேண்டிய நிலை இல்லை.

தமிழ் மக்கள் இந்தத் தேர்தலில் அக்கறை காட்டுவதன் மூலம் எவ்விதமான நன்மைகளையும் பெற்று விட முடியாது என்பது எங்களின் திடமானதும் தெளிவானதுமான முடிவு. இந்த இரு வேட்பாளர்களது கட்சிகளும் யுத்த நிறுத்தம் ஏற்பட்டதன் பின் ஆட்சியில் இருந்திருக்கிறார்கள். அந்தக் காலத்தில் இடம்பெற்ற நிகழ்வுகளை மனதில் கொண்டு அதை ஆராய்ந்து முடிவெடுக்கின்ற பொழுது இந்தக் கட்சிகள் மீதோ அன்றி வேட்பாளர்கள் மீதோ நம்பிக்கை வைக்க முடியாது என்ற நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம். இதுவே எங்கள் தெளிவான முடிவு எங்களது மக்கள் மேற்சொன்ன நிலைமைகளை அனுபவித்திருக்கிறார்கள். அவர்களுக்கு நடந்தவை அனைத்துமே தெரியும். வடக்கு கிழக்கில் வாழ்கின்ற தமிழ் மக்கள் அனைவருக்கும் நிலைமைகள் நன்றாகத் தெரியும். அதனால் மக்களும் இந்தச் சிந்தனையுடன்தான் இருக்கின்றார்கள். அவர்களது முடிவும் எங்களது முடிவை ஒத்ததாகத் தான் இருக்கும் என்பதில் எங்களுக்கு எவ்வித ஐயப்பாடும் இல்லை. என்றார்

தமிழ் மக்கள் வாக்களிக்க விரும்பினால் அதற்குத் தடையாக இருப்பீர்களா? எனக்கேட்டபோது நிச்சயமாகத் தடுக்க மாட்டோம் தமிழ் மக்களின் சனநாயக உரிமையைப் பறிக்கும் நோக்கம் எமக்கில்லை. ஆனால் தமிழ்மக்கள் தமது அனுபவங்களின் அடிப்படையில் இந்தத் தேர்தலில் அக்கறை காட்டமாட்டார்கள் என்பது எமது நம்பிக்கை. எனவும் தெரிவித்தார் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன். நேற்றுக் காலை 11.00 மணிக்கு கிளிநொச்சியில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் அவர்களுக்குமான சந்திப்பு நடைபெற்றது.

சுமார் மூன்றரை மணிநேரம் இச்சந்திப்பு நீடித்தது. இதில் தமிழீழ விடுதலைப்புலிகள் தரப்பில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ. தங்கன் விடுதலைப்புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி,வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானம், மன்னார் மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் இனியவன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் சார்பில் அதன் தலைவர் இரா.சம்பந்தன், மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம். வன்னிப்பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன். யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் மா.வை. சேனாதிராஜா,சுரேஸ் பிரேமச்சந்திரன் உட்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். ஊடகவியலாளர்களிடம் பாராளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் கூறியதாவது;

சிங்களதேசத்திற்கான தேர்தல் தொடர்பாக தமிழர்கள் குழப்பிக் கொள்ள வேண்டியதில்லை. 1972-77 ஆம் ஆண்டு காலகட்ட அரசியல் அமைப்புக்களை தமிழர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அதனால் இதை எங்கள் அரசாக நாம் ஏற்கவில்லை. இது எங்கள் தேசத்திற்கான தேர்தலு மல்ல சிங்கள தேசத்திற்கான தேர்தல் என்றார் அவர்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.